1972 ஆகஸ்ட் 19]

லாம் என்று பல இடங்களில் செய்து காட்டப்படுகிறது. அது உடலுக்கும் நல்லது, குழந்தைகளுக்கும் நன்கு பயன்படும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, பம்பாயிலிருந்து வருகிற 'சபோலா' இதே எண்ணெய் தானா? தெரியாததால் இங்கு வடநாட்டிலிருந்து எண்ணெய் வரவழைக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அதே எண்ணெய் தான்.

Cultivation of Saffron

* 109. Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether steps have been taken by the Agriculture Department to cultivate saffron in this State; and

(*b*) if so, the details thereof?

குங்குமப்பூ பயிரிடுதல்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் குங்குமப்பூ பயிரிட வேளாண்மைத் துறை முயற்சி எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) உதகமண்டலத்திலும் கோடைக்கானலிலுள்ள பிரையன்ட் பூங்காவிலும் அமைந்துள்ள அரசு விதைப்பண்ணைகளில் குங்குமப்பூ பயிரிடுவதற்கான சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நடத்தப்பட்டுள்ள சோதனைகளின் முடிவுகள் தெரியவந்த பின்னரே, குங்குமப்பூ பயிரிடுவதைப்பற்றிக் கருதிப்பார்க்கப்படும்.

Gurjun Plantations

* 110. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are gurjun plantations in this State; and

(*b*) if so, the details thereof?

குட்டநோய் களிம்புத் தைலம் தரும் மரவகைகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் குட்டநோய் களிம்புத் தைலம் தரும் "குர்ஜுன்" (Gurjun) கிழக்கிந்திய மரவகைகள் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Agricultural Classes to S.S.L.C. students

* 111. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to conduct Agricultural Classes to **S.S.L.C.** students in districts ; and

(*b*) if so, the details thereof ?

எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்கு வேளாண்மை வகுப்புகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்டங்களில் உள்ள எஸ்.எஸ்.எல்.சி. மாணவர் களுக்கு வேளாண்மை வகுப்புகள் நடத்தும் செயற்குறிப்புகள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு மன்னை. ப. நாராயணசாமி : (அ) பள்ளி இறுதி வகுப்பு மாணவர்களுக்கு மாவட்டங்களில் விவசாய வகுப்பு கள் நடத்தும் செயற்குறிப்புகள் ஒன்றும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.